## நடவடிக்கையின் தலைப்பு : அதிசய வார திட்டப்பணி - “தோரணம்”

### 1. நடவடிக்கையின் பின்னணி:

பிள்ளைகள் ‘புது வீடு’ என்னும் பெரிய புத்தகத்தை ஆசிரியருடன் சேர்ந்து வாசித்தார்கள். அவர்கள் புத்தகத்தில் இடம்பெற்ற கோலம் போடுதல், பால் காய்ச்சுதல், உறவினர்களை உபசரித்தல், தோரணம் கட்டுதல் போன்ற பல புதியச் சொற்களையும் தமிழர்களின் மரபையும் பண்பாட்டைப்பற்றியும் தெரிந்துகொண்டார்கள்.

அதிசய வாரத் திட்டப்பணி செய்வதற்காகத் தாங்கள் படித்த பெரிய புத்தகங்களிலிருந்து ‘புது வீடு’ என்னும் புத்தகத்தைப் பிள்ளைகள் தேர்ந்தெடுத்தார்கள். அந்தப் புத்தகத்தில் இடம்பெற்ற **“அப்பா வாசலில் தோரணம் கட்டினார்”** என்னும் வாக்கியத்தைத் தெளிவாகச் சொல்லக் கற்றுக்கொண்டார்கள். பிள்ளைகள் ஆசிரியரிடம் தோரணத்தைபற்றிப் பல கேள்விகள் கேட்டார்கள். அதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.






**பிள்ளைகள் மின்னட்டைகளில் உள்ள சொற்களைப் பெரிய புத்தகத்தில் சுட்டிக்காட்டுதல்**

**2. நோக்கங்கள்:**

- ❖ பிள்ளைகள் தோரணம் கட்டத் தெரிந்துகொள்வார்கள்.
- ❖ பிள்ளைகள் தோரணம் கட்டத் தேவையான பொருள்களின் பெயர்களைத் தெரிந்துகொள்வார்கள்.
- ❖ பிள்ளைகள் பலவகையான தோரணங்களின் பெயர்களைத் தெரிந்துகொள்வார்கள்.
- ❖ பிள்ளைகள் மறுபயனீட்டுப் பொருள்களைக்கொண்டு எவ்வாறு தோரணங்களைச் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொள்வார்கள்.

**3. நடவடிக்கையின் படிநிலைகள்:**

அதிசய வாரத் திட்டப்பணி மூன்று படிநிலைகளைக்கொண்டது.

**முதல் படிநிலை: நான் தெரிந்து கொள்ள விரும்புவது....**

பிள்ளைகள் அதுவரை படித்த பெரிய புத்தகங்களைப்பற்றியும் நடவடிக்கைகளையும்பற்றியும் ஆசிரியருடன் கலந்துரையாடினார்கள். பிள்ளைகள் அதிசயவாரத்திட்டப்பணிக்குத் 'தோரணம்' என்னும் தலைப்பை வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுத்தார்கள். பிள்ளைகள் தோரணத்தைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை ஆசிரியரிடம் கூறினார்கள்.


எ.டு:

- ❖ வீட்டில் தோரணம் கட்டியிருப்பார்கள்.
- ❖ அது பச்சை நிறத்தில் இருக்கும்.
- ❖ தீபாவளிக்கும் பொங்கல் திருநாளுக்கும் அப்பா தோரணம் கட்டுவார்.


பிள்ளைகள் பின்வரும் வினாக்களை எழுப்பினர்.

- ❖ ஏன் தோரணம் கட்டப்படுகிறது?
- ❖ தோரணம் கட்டத் தேவையான பொருள்கள் யாவை?
- ❖ என்னென்ன விதமான தோரணங்கள் உள்ளன?
- ❖ எப்படித் தோரணம் கட்டுவது?

பிள்ளைகள் தாம் எழுப்பிய வினாக்களுக்கான விடைகளைத் தம் நண்பர்களுடன் கலந்துரையாடிய பின்னர், ஆசிரியரிடம் தெரிவித்தார்கள்.



**பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.**



**பிள்ளைகள் ஆசிரியர் காட்டிய தோரணங்களின் படங்களைப் பார்த்து அதைப்பற்றிக் கேள்விகள் கேட்கிறார்கள்.**

**இரண்டாம் படிநிலை: நான் கண்டுபிடித்தவை....**

பிள்ளைகள் ஏன் வாசலில் தோரணம் கட்டப்படுகிறது என்பதைப் பெற்றோர்களிடம் கேட்டும், இணையத்தளத்தின்வழியாகத் தகவல்கள் திரட்டியும் தெரிந்துகொண்டார்கள்.

ஆசிரியர் பள்ளி நிர்வாகத்தினரின் அனுமதியுடன் பிள்ளைகளைப் பள்ளித் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று மாவிலைகளைப் பறித்து வந்தார். அவற்றைக்கொண்டு பிள்ளைகள் மாவிலைத் தோரணம் கட்டத் தெரிந்துகொண்டார்கள். பிள்ளைகள் வீட்டு வாசலில் தமிழர்கள் மாவிலைத்



சிறுமி மாவிலைத் தோரணம் கட்டுகிறாள்.



பிள்ளைகள் பள்ளியில் உள்ள மாமரத்திலிருந்து மாவிலையைப் பறிக்கிறார்கள்.

தோரணம் கட்டும் காரணத்தைத் தெரிந்துகொண்டதோடு அதை எப்படிக் கட்டுவது என்பதையும் அனுபவப்பூர்வமாக அறிந்துகொண்டார்கள்.

பிள்ளைகள் தென்னங்குறுத்தால் தோரணம் கட்ட பெற்றோர் ஆதரவுக்குழு உறுப்பினரான திருமதி கார்த்தியாயினியிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். தாங்கள் செய்த தோரணத்தை எவ்வாறு வாசலில் கட்டுவது என்பதை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.





பிள்ளைகள் திருமதி கார்த்தியாயினியிடம் தென்னங்குறுத்தில் எப்படித் தோரணம் கட்டுவது என்பதைத் தெரிந்துகொண்டார்கள்.





**பிள்ளைகள் தாம் கட்டியத் தோரணத்தைத் தம் நண்பர்களிடம் காட்டுகிறார்கள்.**

## மூன்றாம் படிநிலை: நான் தெரிந்துகொண்டவை...


பிள்ளைகள் வண்ணத் தாள்களைக்கொண்டும் அலங்காரத்தோரணம் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொண்டு வகுப்பில் ஆசிரியருடன் சேர்ந்து வண்ணத் தாள்களைக்கொண்டு பலவிதமான அலங்காரத் தோரணங்களைச் செய்தார்கள்.
பிள்ளைகள் மறுபயனீட்டுப் பொருள்களைக்கொண்டும் தோரணங்களைச் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். பிள்ளைகள் வீட்டில் பெற்றோருடன் சேர்ந்து மறுபயனீட்டுப் பொருள்களைக்கொண்டு தோரணங்களைச் செய்துகொண்டு வந்து தங்கள் அனுபவத்தை நண்பர்களிடம் கூறினார்கள்.



**"இது நான் செய்த நட்சத்திரத் தோரணம்."**



**"எனக்குப் பிடித்த பன்டிங் தோரணம்."**



"இது என்னுடைய பூத்தோரணம்."







"இது நான் செய்த பூவும் இலையும்கொண்ட தோரணம்."



**பிள்ளைகள் பெற்றோர்களுடன் சேர்ந்து மறுபயனீட்டுப் பொருள்களைக் கொண்டு தோரணங்களைச் செய்தார்கள். வகுப்பில் தங்கள் நண்பர்களிடம் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்கள்.**

**நடவடிக்கையின் நிறைவு:**

இந்த அதிசய வாரத் திட்டப்பணியின்மூலம் பிள்ளைகள்:

- ❖ தன்னம்பிக்கையுடன் பேசினார்கள்.
- ❖ நண்பர்களுடன் தமிழில் கலந்துரையாடினார்கள்.
- ❖ குழு உணர்வுடன் செயல்பட்டார்கள்.
- ❖ பெற்றோருடன் இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட்டார்கள்.
- ❖ தாங்கள் கண்டறிந்தவற்றைப்பற்றிப் பேசினார்கள்.
- ❖ திட்டமிட்டுச் செயல்பட்டார்கள்.

**அதிசய வாரத் திட்டப்பணியின் வாயிலாகப் பிள்ளைகள் பல புதிய சொற்களைக் கற்றுக்கொண்டதோடு அவர்களுக்குத் தன்னம்பிக்கையுடன் தமிழில் பேசும் வாய்ப்பும் ஏற்பட்டது.**

Contributed by:
Ramachandran Shanthi (Senior Teacher – TL teacher)
Mrs Karthiyayini (PSG Member)